முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 03.09.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 03.09.2025 | சாட்சி | வா.சா.4 |
| பெயர். | சுந்தர விநாயகம் | வயது.. | 60 |
| தந்தை பெயர். | உத்திராபதி | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் வாடகைக்கு பாத்திரம் கடை வைத்திருக்கும் இடம் யாருக்கு சொந்தம் என்றால் ACP.ரத்தினசுப்பிரமணியத்திற்கு சொந்தமான இடமாகும். 35 ஆண்டு காலமாக சங்கத்தின் உறுப்பினராக இருக்கிறேன் என்றாலும் எனக்கு தெரிந்த வரை யார் தலைவர் என்றால் கமலகண்ணன் தவைராக இருந்தார், எந்த ஆண்டு கமலகண்ணம் தலைவராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. கவுரவ தலைவராக T.T.கலியபெருமாள் எந்த ஆண்டு இருந்தார் என்றால் ஆண்டு தெரியாது. 167C இடத்தின் விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன இடத்தில் யார் யார் வாடகைக்கு இருந்தார் என்றால் கடை ஒன்று கட்டிடம் ஒன்று இருக்கிறது, யார் கடை வைத்திருக்கிறார் என்றால் 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் கடை வைத்து நடத்தி வருகிறார். மாசிமகம் உற்சவத்திற்கு ஸ்ரீபூவராகசாமி ஸ்ரீமுஷ்ணத்தில் இருந்து கிள்ளைக்கு மாசிமக தீர்த்தவாரிக்கு செல்வார் என்றால் சரிதான். திரும்பி வரும் போது புவனகிரிக்கு வருவார் என்றால் சரிதான்.

2. சாமி பல்லக்கு தூக்குபவர்களுக்கு படி அரிசி தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். பல்லக்கு தற்போது பயன்பாட்டில் இல்லை, டிராக்டர் சகடையை தற்போதைய காலத்தில் இழுத்து வரும். சகடையை பாதுகாப்பவர்களுக்கு படி காசு கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். படி காசுற்கு ரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையைல் பல்லக்கில் வீதி உலா வரும் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன படி காசு ரசீது சங்கத்தில் இருக்கும் என்றால் சரிதான். வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கு மரியாதை செய்வதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், மரியாதை நிமிர்த்தமாக உறுப்பினர் களுக்கு சால்வை கொடுத்து

அனுப்புவோம். எனக்கு உற்சவத்திற்கு பத்திரிக்கை வந்ததா என்றால் வந்தது, வருடா வருடம் கண்டிபாக வரும். பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, விவரம் தெரியாது.

3. 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் வர்த்தக சங்க உறுப்பினர் இல்லை என்பது எப்படி தெரியும் என்றால் ஆரம்ப காலத்தில் இருந்து 35 வருடமாக நான் இருப்பதால் எனக்கே தெரியும். நான் உறுப்பினர் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிதான் வர்த்தக சங்கத்தை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல மறுக்கிறேன். 1ம் பிரதிவாதி என்ன கடை வைத்திருக்கிறார் என்றால் அச்சகம் வைத்திருக்கிறார். நான் வர்த்தக சங்க உறுப்பினர் இல்லை என்றாலும் நான் ACP.ரத்தினசுப்பிரமணியம் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.